1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை எங்கெங்கு அமைப்பது என பதை அரசு ஆராய்ந்து கொண்டு வருகிறது. அந்த வகையிலே தூத்துக்குடி பகுதியிலே இப்போது, மரபு சாரா எரிபொருள் சக்தி' துறையின் மூலமாக ஒரு கோடி ரூபாய் நிதியுதவி பெற்று 55 கிலோவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய 10 காற்றாலைகள் நிறுவப்பட்டு அவை பயன்பட்டுக் கொண்டு வருகின்றன.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி பகுதியில் முல்லைக் காட்டில் இயங்கி வருகின்றன. ஆலை மிகச் சிறப்பாக இயங்கி வருவதாக அறிந்திருக்கிறேன். அதே நேரத்தில் சாத்தான் குளத்தில் எந்தவிதமான தொழிலும் இல்லை. வறட்சியான பகுதியாகவும் இருக்கிறது. அங்கேயுள்ள மக்கள் நலன் பெறும் வகையில், தொழில் வாய்ப்பு பெறும் வகையில் இந்த காற்று மின்னாக்கி நிலையம் ஒன்றை சாத்தான்குளத்தில் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்திற்கு அருகிலே கஸ்தூரி ரங்காபுரம் என்ற இடத்திலே அளவு மானி 28—7—1986-லே நிறுவப்பட்டிருக்கிறது. 2, 3 ஆண்டுகளில் ஆராய்ந்த பிறகு, காற்று வீசும் தன்மைகளைக் கணக்கிட்டு, பிறகு அந்த காற்று மின்னாக்கி நிலையம் நிறுவுவது பற்றி ஆராயப்படும்.

தஞ்சாவூரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்.

465—(*வினா எண். 2452) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.